# THE ROMAN CATHOLIC DIOCESE OF KUZHITHURAI

Fr. Antony M. Muthu
Chancellor

Bishop's House
Post Box No. 1
Unnamalaikadai - 629 179
Kanyakumari District
Tamilnadu, India

Off : 9444688225 www.kuzhithuraidiocese.com chancellor.rcdk@gmail.com


**CH/CEN/L-1/2025** ஜனவரி 08, 2025

**அன்புமிகு அருள்பணியாளர்களே!**

2025-ம் ஆண்டு விடியலின் வாழ்த்துகள்!

தமிழ்நாடு கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களின் சமூக, பொருளாதாரக் கணக்கெடுப்பு 2024 - 2025-க்கான முதற்கட்டப் பயிற்சி வட்டார அளவில் நவம்பர் மாதம் 16, 17 ஆகிய நாட்களில் எல்லா பங்கு பிரதிநிதிகளின் பங்கேற்புடன் சிறப்பாக நடைபெற்றது. இதனை சிறப்பாக ஒருங்கிணைத்த வட்டார முதன்மைப் பணியாளர்களுக்கும், பொறுப்பான நபர்களை அனுப்பி வைத்த பங்கு அருள்பணியாளர்களுக்கும், பங்கேற்றப் பங்கு பிரதிநிதிகளுக்கும் பாராட்டுகள். அனைவரும் அடுத்தகட்டப் பணிகளைச் செய்ய ஆர்வமுடன் காத்திருக்கின்றீர்கள் என்பதை அறிந்து மகிழ்கிறேன்.

## அடுத்தகட்டப் பணிகள்:

1. மறைமாவட்ட ஒருங்கிணைப்புக் குழு ஆயரின் வழிகாட்டுதலில் அடுத்தகட்டப் பணியை முன்னெடுக்க ஆய்வு செய்தபோது, நம் மறைமாவட்டத்திற்கான சில சிறப்பு விபரங்கள் தமிழகக் கணக்கெடுப்புப் பட்டியலில் இல்லை. இதனைக் கருத்திற்கொண்டு, மறைமாவட்டத்திற்கென்று தனியாக கணக்கெடுப்புப் பட்டியல் தயாரித்து, அதில் கணக்கெடுக்கும் நபர்கள் எழுத்து வடிவில் பதிவு செய்தும், தமிழகத்திற்கு Kobo Tool box Software வழியாக தகவல் கொடுத்தும் செயல்படுத்த வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. அதனடிப்படையில் இம்மாதம் 11-ம் தியதி சனிக்கிழமை, காலை 9.30 மணி முதல் அன்னை ஆதா மையத்தில் வைத்து வட்டார அளவிலான இக்கணக்கெடுப்பை ஒருங்கிணைக்கும் குழுவிற்கானப் பயிற்சி நடைபெறும். இதில் அந்தந்த வட்டார முதன்மைப் பணியாளர், தொழில் நுட்ப நெறியாளர் மற்றும் 5 முதல் 10 நபர்கள் வரை ஒவ்வொரு வட்டாரமும் தேர்வு செய்து அழைத்து வரும் உறுப்பினர்கள் பங்கேற்பர். இப்பயிற்சியின்போது தமிழகக் கணக்கெடுப்போடு நம் மறைமாவட்டக் கணக்கெடுத்தலையும் சேர்த்து எடுப்பது எவ்வாறு என்பதை மறைமாவட்டக் கணக்கெடுப்புப் பட்டியல் மற்றும் அதற்கான வழிகாட்டுக் குறிப்பு (Key) கொண்டு விளக்கிக் கொடுக்கப்படும்.

2. மேற்படி பயிற்சி பெறும் குழுவினர் அந்தந்த வட்டாரத்தில் உள்ள பங்குகளுக்கு இருவர் இருவராகச் சென்று பங்குகளில் பங்குத்தந்தை, ஏற்கெனவே பயிற்சிபெற்ற உறுப்பினர் மற்றும் ஒவ்வொரு அன்பியங்கள் சார்பாக கணக்கெடுப்பு மேற்கொள்ளும் உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்குவர். எல்லா பங்குகளிலும் இப்பயிற்சியானது ஜனவரி 31, 2025-க்குள் முடிக்கப்பட்டிருக்க வேண்டும்.

# THE ROMAN CATHOLIC DIOCESE OF KUZHITHURAI

Fr. Antony M. Muthu
Chancellor

Bishop's House
Post Box No. 1
Unnamalaikadai - 629 179
Kanyakumari District
Tamilnadu, India

Off : 9444688225 www.kuzhithuraidiocese.com chancellor.rcdk@gmail.com

3. பங்குகள்தோறும் பயிற்சி பெற்றோர் அன்பியங்கள் வாரியாக கணக்கெடுப்பு நடத்தி உடனுக்குடன் Kobo Tool box மென்பொருள் வழியாக தமிழகத்திற்கும், மறைமாவட்ட கணக்கெடுப்புப் பட்டியலை பூர்த்தி செய்து பங்கிலுள்ள ஒருங்கிணைப்பாளர்களுக்கும் பெப்ருவரி மற்றும் மார்ச் மாத இறுதிக்குள் வழங்குவர்.

4. பங்குகளில் அன்பியங்களிலிருந்து கிடைக்கப்பெறும் கணக்கெடுப்புப் பட்டியலைப் பங்கு ஒருங்கிணைப்பாளர்கள் மறைமாவட்டம் தரும் மென்பொருளில் பதிவேற்றம் செய்து பங்கு அலுவலகத்தில் பாதுகாப்பர்.

5. பங்கு அலுவலகங்களில் பாதுகாக்கப்படும் விபரங்களை பங்குகள் வட்டார ஒருங்கிணைப்புக் குழுவிற்கு வழங்கும். அவர்கள் அவற்றைத் தொகுத்து மறைமாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிற்கு வழங்குவர்.

6. ஒவ்வொரு பங்கும் தங்கள் பங்குகளில் உள்ள குடும்பங்களுக்கு ஏற்ப வட்டார அலுவலகத்திலிருந்து மறைமாவட்டக் கணக்கெடுப்புப் பட்டியலை ஜனவரி 27, 2025 முதல் விலை கொடுத்து வாங்கிக் கொள்ள வேண்டும். ஒரு கணக்கெடுப்புப் பட்டியலின் விலை **ரூ.5/-**

7. ஒவ்வொரு பங்கும் பங்கில் நடைபெறும் பயிற்சிக்கும், அன்பியங்கள்தோறும் வீடு வீடாகச் சென்று கணக்கெடுப்பு விபரம் சேகரிப்பவர்களுக்கும், அதனை மென்பொருளில் பதிவேற்றம் செய்பவர்களுக்கும் ஊக்கத்தொகை வழங்க வேண்டும்.

மேற்படி பணிகளின் வழியாக நாம் தமிழக அளவில் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களின் சமூகப் பொருளாதாரக் கணக்கெடுப்புத் தகவல்களை வழங்குவதோடு, நம் பங்கு அளவிலும் தேவையான எல்லாத் தகவல்களையும் கணக்கெடுப்புப் படிவத்தில் பதிவு செய்தும், அவற்றை மென்பொருளில் பதிவேற்றம் செய்தும், பங்கு, வட்டாரம் மற்றும் மறைமாவட்ட அளவில் பயன்படுத்த இருப்பதால் 2025-ம் ஜூபிலி ஆண்டில் நம் முதன்மைப் பணிகளில் ஒன்றாகக் கருதி அனைத்துப் பங்குகளும் மார்ச் 31, 2025-க்குள் இப்பணிகளை சிறப்பாக முடித்திட அன்புடன் வேண்டுகிறேன்.

**பணித்தோழமையில்,**

Fr. Antymuthu
08-01-25

DIOCESE OF KUZHITHURAI
CHANCELLOR
UNNAMALAIKADAI

**அருள்பணி. அந்தோணி M. முத்து,**
**கணக்கெடுப்பு ஒருங்கிணைப்பாளர்.**

**நகல்** : மேதகு ஆயர் ஆல்பர்ட் G. A. அனஸ்தாஸ், குழித்துறை மறைமாவட்டம்.